பக்கங்கள் 10 விலை சதம் 40

தரத்தில் நிகரற்ற
மான்
வரிக்குதிரை, முயல்,
விளக்கு, செவன மார்க்
ஓடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்,
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

# ஈழநாடு
# EELANADU

Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஐப்பசி 3 ஜுல்ஹஜ் 27 இதழ் 250
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-10-79

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1979-10-21
PERIODICALS DIVISION
LIBRARY

தீபாவளித் தித்திப்பு!
மாபெரும் திறப்புவிழா
22-10-79 காலை
தையல்கலையில்
கைதேர்ந்தவர்களைக்கொண்ட
லக்ஸ் ரெக்ஸ்
காமென்ஸ்
404, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஜனாதிபதி ஜே. ஆருக்கு கொலை பயமுறுத்தல்

## சுதந்திரக்கட்சி தொழிற்சங்க தலைமைக் காரியாலயத்திலிருந்து 3 குண்டுகள் மீட்பு

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் பயமுறுத்தல் பற்றி இரகசிய பொலிசாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தொழிற்சங்கத் தலைமைக் காரியாலயத்திலிருந்து 3 கைக்குண்டுகள் மீட்கப்பட்டதுடன் நான்கு பேர் பொலிசாரால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

கறுவாக்காடு - தர்மபால மாவத்தை 221/6ம் இலக்கத்திலுள்ள ஜனாதிபதியின் பிரத்தியேக பல்வைத்திய சிகிச்சை நிலையத்துக்கு திரு. ஜெயவர்த்தனா வரும்போது அவரைக் கொலைசெய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டதாம்.

திரு ஜெயவர்த்தனா பல் சிகிச்சை நிலையத்துக்கு வரும்போது கொலைசெய்வதே பொருத்தமான சந்தர்ப்பம் என அதேவீதியில் 213ம் இலக்கத்தில் உள்ள தொழிற்சங்க காரியாலயத்தில் இளர் கூடிப் பேசியதாகப் பொலிசாருக்குத் தகவல் எட்டியுள்ளது.

கடந்த மாதம் இக்காரியாலயத்துக்கு சில கைக்குண்டுகள் கொண்டுவரப்பட்டு பின்னர் எடுத்துச்செல்லப்பட்டது என்றும் தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் இதற்கு முன்தின முன் திரு. ஜெயவர்த்தனா குறிப்பிட்ட பல்சிகிச்சை நிலையத்திற்கு வந்துபோனார் என்றும் நேற்றுக்காலை 8-30 மணிக்கும் இந்நிலையத்திற்கு வருவதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

நேற்றுக் காலை பொலிசார் தொழிற்சங்க காரியாலயத்தில் நடத்திய திடீர் சோதனையின் போதே 3 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டன.

[10ம் பக்கம் பார்க்க]

## யோகேந்திரா வாழ்த்து

தீபத்திருநாளாம் இத்தீபாவளி நந்நாளில் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

யாழ் மாவட்டச் செயலாளரும் அரச அதிபருமான திரு யோகேந்திர துரைசுவாமி வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். [கு]

## அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்று 20-10-79 சனிக்கிழமை 'ஈழநாடு' ஊழியர்களுக்கு விடுமுறையாதலால் "ஈழநாடு" அலுவலகம் இன்று மூடப்பட்டிருக்கும். எனினும் ஞாயிறு வாரமலர் வழமைபோல் வெளிவரும்.

--நிர்வாகி



அனைவருக்கும் எமது இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

## சங்கிலித்தோப்பில் சட்டவிரோத காணி குத்தகை: தொல்பொருள் இலாகா நடவடிக்கை எடுக்கும்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் சங்கிலியன் தோப்பிலுள்ள கோவில் காணிகளை சட்டத்திற்கு முரணாக குத்தகைக்கு கொடுத்தது தொடர்பாக தொல்பொருள் இலாகா நடவடிக்கை எடுக்க விரும்புவதாகத் தெரியவருகிறது.

தொல்பொருள் சட்டத்தின்படி புராதனசின்னங்கள் உள்ள பிரதேசங்களை அக்காணிகளை சுவீகரிப்பதற்கு அரசுக்கு உரிமையுண்டென்றும் அதன்படி சங்கிலித்தோப்பு பிரதேசத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

நகருக்குள் சீர்கெட்டமுறையில் குடியேற்றம் நடப்பது நகர திட்டமிடலுக்கும், சுகாதாரத்திற்கும் மாறானதென்றும் கூறப்படுகிறது.

சங்கிலியன் தோப்பில் குடியேற்றப்பட்டவர்களின் சிரத்தை நடத்தையினாலும் மேலதிகாரிகளின் அதிகாரத்தையினாலும் அரசியல் வாதிகளின் அக்கறையின்மையாலும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமலிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## கூட்டணித் தலைவர் செய்தி

[யாழ்ப்பாணம்]

உலகத்தில் அநீதி நிலவும் போது நீதியை நிலைநாட்ட ஒரு தெய்வீக புருஷர் தோன்றுவது என்பது எமது நம்பிக்கை. இன்றும் உலகில் அநீதி கொடுமை வறுமை ஆகியன தாண்டவமாடி வருவதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இவைகளை அகற்றி சமத்துவமான- நீதியின் அடிப்படையில் எல்லாரும் சுபீட்சமாக வாழும் ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என உறுதிபூணுவதே தீபாவளிப்பண்டிகையில் நாம் செய்யக்கூடிய கடமையாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம்.

( 0-ம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்றத்தில் யாழ். அரசாங்க அதிபர் ஆஜராகவில்லை
### இரண்டு வாரம் அவகாசம்

[கொழும்பு]

யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி நேற்று உயர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

"சுதந்திரன்" பத்திரிகை ஆசிரியர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனு மீது நேற்று உயர்நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு திரு. துரைசுவாமிக்கு ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய விசாரணையில் உயர்நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு ஆறுவாரகால அவகாசம் வழங்குமாறு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதியரசர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்;

இவ்வேண்டுகோளுக்கு ஆட்சேபனை தெரிவித்த மனுதாரரின் சட்டத்தரணி திரு. புள்ளநாயகம், திரு. துரைசுவாமி "சுதந்திரன்" பத்திரிகை அச்சிடுவதற்கு அனுமதி அளிப்பதில் தொடர்ந்து காலதாமதம்

[10-ம் பக்கம் பார்க்க]

'சப்தஸ்வரங்கள்'
யாழ். திறந்த வெளியரங்கில் நேற்றைய தினம் நடைபெறவிருந்த மழைகாரணமாக ரத்துச் செய்யப்பட்ட கே. ஏ தங்கவேலு, எம். சரோஜாவின் 'சப்தஸ்வரங்கள்' நாடக டிக்கட்டுகள் இன்று நடைபெறும் 'ராகமாலிகை' நாடகத்திற்கு அனுமதிக்கப்படும்.
கலாஸ்டேஜ்
3809

அனைவருக்கும் எமது அன்புத் தீபாவளி வாழ்த்துக்கள்!
யாழ். மக்களின் சிறந்த படப்பிடிப்பாளர்கள்
★ பாரத் ஸ்ருடியோ ★
கஸ்தூரியார் வீதி (போன்: 252) யாழ்ப்பாணம்
3745

# வரி விளம்பரம்

## தேவை

இனிப்புத் தொழிற்சாலைக்கு பையன்கள் தேவை. நேரில் வரவும். டாட்டா [கொமர்ஷல் பக்ஷனரிஸ்] வேக்ஸ் பாடசாலை வீதி, கொண்டாவில் மேற்கு, கொண்டாவில். 3878

## தேவை

1979 மார்கழி தொடக்கம் குடியிருக்க தண்ணீர், மின்சார வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. இருபாலை, கோப்பாய் ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது. வேறு இடங்களாயினும் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 3875, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 3875

இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
32, வைமன் வீதி
யாழ்ப்பாணம்

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெரு இல. 19ஐச் சேர்ந்த காலஞ்சென்ற விக்டேட் தம்பிரத்தினம் ஜெயானந்தன் என்பவரின் மரண சாதனையிலலச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

தம்பிரத்தினம் ஜெயானந்தன் மைத்துனி நீற்று பவளம் இல. 19, 2ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்க இல. 3477

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 9ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1979ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
3869

## விற்பனைக்கு

12½ ஏக்கர் இரண்டு போகமும் செய்யக்கூடிய தண்ணீர் வசதியுடன் நெற்காணி—D 5 பரந்தன், பாமியுக்கமம் என்றழைக்கப்படும் நெற்காணி விற்பனைக்குண்டு. மேட்டு நிலம் ½ ஏக்கர், 4 ஏக்கர் தோட்டம் [செய்யக்கூடிய வற்றாத நன்னீர்க் கிணறு, தென்னை, சிறு வீடு என்பனவற்றை உள்ளடக்கியது பஸ் போக்குவரத்து வசதியுண்டு காணி பரந்தன் புகையிரத நிலையத்திலிருந்து பூநகரி பாதையில் 1 மைல் தூரத்தில் உள்ளது விபரங்களுக்கு; பாலசிங்கம், 56, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர் அல்லது யோகலிங்கம் J.P., மரணவிசாரணை அதிகாரி, கிளிநொச்சி. 3887

தமிழ் தட்டச்சு யந்திரம் ஒன்று விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு: ராஜ் அச்சகம், 157, நாவலர் வீதி [மனோகரா தியேட்டர் சந்தி], யாழ்ப்பாணம். 3888

## குத்தகைக்கு

ஒரு வீடு 3 கிணற்றுடன் கூடிய மூலளியாளில் 20 ஏக்கர் தென்னையும், 20 ஏக்கர் வெற்று நிலமும் குத்தகைக்கு உண்டு. விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல 3891, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3891

### காளி கோவிலில் கேதார கௌரி விரத விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் திருநெல்வேலி, கன்னாட்டிட்டி ஸ்ரீ காளிகா தேவி கோவில் ஸ்ரீ கேதாரகௌரீஸ்வரன் விரத அநுஷ்டான பூஜா கலாபங்கள் வழமைபோல் இவ்வருடம் நாளை சனிக்கிழமை மாலை 7 மணிமுதல் நடைபெறும். விரதார்த்திகள் தேவஸ்தான அறங்காவல் காரியாலயத்தில் முன்னதாகவே ஏற்பாடுகள் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### பஹுகுணா - சரண்சிங் சந்திப்பு

புதுடில்லி, அக். 19

இந்திய நிதிமந்திரியும் ஜனநாயக காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. எச். என். பஹுகுணா பிரதமமந்திரி திரு சரண்சிங்கை இன்று சந்தித்து நீண்டநேரமாகப் பேச்சு நடத்தினார்.

மக்கள் கட்சியுடன் ஜனநாயகக்கட்சியை இணைப்பது குறித்து இருவரும் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

## முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி



### அமரர் ஆறுமுகம் சிவசம்பு

தோற்றம்: 25-02-1904 ... மறைவு: 31-10-1978

எங்கள் அன்பின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து இன்றுடன் ஓராண்டு நிறைவுபெற்றபோதும் உங்கள் நினைவுகளுடனேயே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நீங்கள் எங்கள் மேல் காட்டிய பாசம், கூறிய அறிவுரைகள் என்றும் எங்கள் நினைவைவிட்டு அகலா எங்கள் குலவிளக்காய் வந்துதித்த தெய்வமே! உங்களுடைய பூதவுடல் எம்மை விட்டு நீங்கினாலும் புகழுடம்பு என்றும் இத்தரணியில் நிலைத்திருக்கும். இன்று உங்களது முதலாண்டு நினைவுதினத்திலே ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வணங்கி நிற்கும்,

ஆருயிர் மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
3898

---

இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

யாழ். நகரில்

∴ மணிக்கூடு ∴ றேடியோ

திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்

## டில்கா வாச் வேக்ஸ்

பஸ்நிலைய எதிர் மேல்மாடி • யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8174

---

அனைவருக்கும் அன்பு கலந்த

## தீபாவளி வாழ்த்துக்கள்

இறக்குமதி செய்யப்பட்ட
லம்பிரெட்டா ஸ்கூட்டர் உதிரிப்பாகங்கள்

- மொரிஸ்மைனர் பிஸ்ரன் வகைகள்
- மொரிஸ்மைனர் புஸ் வகைகள்
- மொரிஸ்மைனர் காஸ்கற் செற் வகைகள்
- Hydrolic Jack 2 ton, 5 ton வகைகள்

விற்பனைக்கு உண்டு

## யாழ். மோட்டார் ஸ்ரோர்ஸ்

108/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7752 (3759)

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

இவ்வாண்டின் சுவைப்பிரியர்களின் தேர்வு ரவர் கோப்பி அன் கூல் பார்.

- பண்டிகைக்கான பட்சணங்கள், ஃ பட்டர் ஃ மாஜரின் ஃ சுத்தமான கோப்பி ஃ சுவைமிகு கேக் வகைகள்
- குளிர்பானங்கள் ஃ ஐஸ்கிறிம் அனைத்தையும் உண்டு மகிழ்ந்திட மீண்டும் நாடவேண்டிய நிறுவனம்

# ரவர் கோப்பி அன் கூல் பார்

324, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். போன்: 7891

---

வாடிக்கையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இனிமையான தீபாவளி வாழ்த்துக்கள்!

ESTD 1922

## யாழ்ப்பாணத்தில் தரம், நம்பிக்கையுடன் ஒறிஜினல்

DUCO, DULUX, PENTALITE பெயின்ற் வகைகளுக்கும், 5 அந்தர் Union மேசைத் தராசுகளுக்கும், Yale பூட்டுக்களுக்கும், Hamilton [Indian] சைக்கிள்களுக்கும் மற்றும் கட்டிடத்தளபாடங்கள், நீர் இறைக்கும் யந்திரங்கள், மருந்து தெளிக்கும் கருவிகளுக்கும், கிருமிநாசினி வகைகளுக்கும் நாட வேண்டிய இடம்


## சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டெட்

Hamilton சைக்கிள் ஒன்றின் விலை ரூபா 750/-

இன்றே நாடுங்கள்

## சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டெட்

206, 208, ஆஸ்பத்திரி வீதி (யாழ். பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
போன்: 462. (3872)



அன்பர்கள்
ஆதரவாளர்கள்!
அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
மான், செவன,
விளக்கு, முயல்,
வரிக்குதிரை
மார்க்
ஓடுகள்
விற்பனையாளர்கள்

மு. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். றோட் - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7493.

# 'அநீதி அழிந்த நாள்'

## 'குமார்' விடுத்த தீபாவளிச்செய்தி

"வாழ்வில் இருள் நீக்கி ஒளி பெற வேண்டும் என்று இறைவனை வழிபட்டு வாழ்த்தும் இந்த தீபத்திருநாளில் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்."

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் விடுத்த தீபாவளிச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிப்பதாவது:

"அநீதி அழிந்தநாள், நீதி நிலைத்த நாள், ஆதிக்கவெறியுடன் ஆயுதபலத்தால் மக்களை வதைத்து அதிகாரம் செலுத்திய அரக்கன் அழிந்தபொன்னாள் இத் தீபாவளித்திருநாள் கண்ணீரும், செந்நீரும் சிந்திய மக்கள் இறையருளால் விடுதலை பெற்ற திருநாளைப் பெருநாளாகக் கொண்டாடும் நாம் இப்புனித திருநாளில் மகத்தான தத்துவத்தை மனதில் இருத்தி இருளைப் போக்கவும் சுதந்திர ஒளியினைப் பெறவும் உறுதிபூணுவோமாக.

"நேர்மையும், சத்தியமும் உறுதியான வெற்றியினை இறையருளால் பெற்றே தீரும் என்ற உண்மையினை உளநிறைவுடன் உணர்ந்தும் இத்திருநாளில் தமிழ்பேசும் மக்களின் இல்லந்தோறும் அகஇருளும் புறவிருளும் நீங்கவேண்டுமென்றும், எம்மினத்தின் சுதந்திர வாழ்வில் வீசும் புயலும் இடரும் நீங்க வேண்டுமென்னும் நம்பிக்கையுடனும் தியாக உணர்வுடனும் செயல்படுவோமாக வாழையடி வாழையெனத் தழைத்து நிற்கும் வளங்குன்றாத் தமிழினத்தின் மேன்மைக்காக உழைக்க இத்திருநாளில் சபதம் பூணுதல் வேண்டும்."

ஜீ.ஜீ.பொன்னம்பலம்
பொதுச்செயலாளர்

### மக்கள் கருத்து

## சைக்கிள் பாதுகாப்பு

சென்ற ஆண்டு யாழ். புகையிரத நிலையத்தில் சைக்கிள் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால் சைக்கிளில் புகையிரத நிலையத்துக்குச் செல்வோர் நிம்மதியாகத் தமது கடமையைச்செய்யக் கூடியதாக இருந்தது.

இப்போது இப்பாதுகாப்பு ஒழுங்கு கைவிடப்பட்ட நிலையில் சைக்கிள் களவுபோவது மீண்டும் தலைதூக்கியுள்ளது.

ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சைக்கிள் பாதுகாப்புமுறை ஏன் கைவிடப்பட்டது? நட்டத்தில் இயங்கியதா? அல்லது சில உத்தியோகத்தரின் விருப்பு வெறுப்புக்கேற்ப நிறுத்தப்பட்டதா?

யாழ்நகர மக்கள் இவற்றுக்கு விடை அறிய விரும்புவதோடு மீண்டும் சைக்கிள் பாதுகாப்புச் சேவையை இயக்கவைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

'நலன்விரும்பி' ஜீவா
யாழ்ப்பாணம்.

## 'சுருட்டுத் தொழிலாளர் திருப்தி'

(யாழ்ப்பாணம்)

"வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ள வேளையில் சுருட்டுத் தொழிலாளர்கள் அகில இலங்கைச் சுருட்டுத்தொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று விதன் கட்டளைப்படி நடத்தபடியால் அவர்கள் நியாயமான கூலியைப் பெற்று தீபாவளித் திருநாளை நல்ல முறையில் கொண்டாட முடிந்துள்ளது" என்று இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ப. க. முதலியார் விடுத்த தீபாவளிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

(கோ-அ)

## 'மும்மொழியும் வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

"சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் இலங்கைக்குடியரசின் அரசகரும மொழிகளாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும். புதிய ஊழியர்களின் நியமனத்தை உறுதிப்படுத்த சிங்கள தேர்ச்சிநிபந்தனையைமுன் வைக்கக்கூடாது"

இவ்வாறு கோரும் தீர்மானம், அரசாங்க எழுது சேவையாளர் காங்கிரஸின் பதினிரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம், இம்மாதம் 22ம் திகதி ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்போது சமர்ப்பிக்கப்படும்.

மேற்படி கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

"அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் உள்ளவர்களின் ஆகக்குறைந்த சம்பளம் 750 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு அவர்களின் பஞ்சம் குறைக்கப்படவேண்டும்.

"இந்துமத அரச ஊழியர்களின் வழிபாட்டுக்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒன்றரை மணித்தியால லீவு வழங்கவேண்டும்.

"போட்டிப்பரீட்சை மூலம் அரச ஊழியர்களைத்தேர்ந்தெடுக்கும் முறை எழுதுவினைஞர் சேவையில் ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் பொழுது கையாளப்படவேண்டும்" என்பனவாகும். (வெ)

## பொருட்காட்சி

(மட்டுவில்)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வெள்ளைப்பிரம்பு தினத்தில் விழிப்புலனிழந்தோரின் கைத்தொழில் பொருட்களின் கண்காட்சியும் இடம் பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கிளப்பின் சார்பில் நடைபெற்ற இந்த வெள்ளைப்பிரம்பு தினத்தில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு.கே பாலகிட்ணர், சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் தம்பதிகள், கைத்தறி கைத்தொழில் அதிபர் திரு. என். நவரத்தினம், திரு. சுந்தரம், சாவகச்சேரி எம். பி. திரு.வ நவரத்தினம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

விழிப்புலனிழந்தோரின் ஊர்வலம் ஒன்றும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலிருந்து சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரி வரை ஊர்ந்து சென்றது. ஊர்வலத்தின்போது விழிப்புலனிழந்தோருக்கு வீதிகளில் தக்க பாதுகாப்பளிக்கும்படி புகை கோரப்பட்டது.

## சந்தை இடமாற்றம்

(உடுப்பிட்டி)

நெல்லியடி மத்திய சந்தையில் உள்ள மரக்கறிச் சந்தை தற்காலிகமாக மூடப்பட்டு நெல்லியடி வதிரி வீதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகச் சந்தைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்திய சந்தையில் நவீன வசதிகளைக் கொண்ட மக்கள் சந்தை கொன்று நிறுவப்படவுள்ளதாலேயே சந்தை இடமாற்றப்பட்டுள்ளது. (அ)

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளம்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
நவநாகரிக
டிசைன்களில்
தங்கப்பவுண் நகைகளுக்கு
எம்மிடம்
விஜயம் செய்யுங்கள்
செ. சிவபாதலிங்கம்
(வைரக்கல் நகைவியாபாரம்)
220, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சிறந்த வேலைப்பாடுள்ள தங்க நகைகளை
விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்
ஓடர்கள் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்துகொடுக்கப்படும்

வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
பாஸ்போட், விசா முதலிய தேவைகளைப்
பூர்த்தி செய்ய நாடுங்கள்
கவிதாஸ் ட்றவல் ஏஜன்ட்ஸ்
22, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!
த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ்
[பிடவை மொத்த சில்லறை விற்பனையாளர்]
21, புதிய மக்கள் நவீனசந்தை
மின்சாரநிலைய வீதி -- யாழ்ப்பாணம்.
இலங்கா கைத்தறி பிடவைகளும், சிந்தட்டிக் பிடவைகளும் - சலுசலா சித்தையும், சேட்
மற்றும் சகல பிடவைகளும் சகாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தீபாவளித் திருநாளில் சகலருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
● சகலவிதமான பிடவைத் தினுசுகளுக்கு "மணியம்ஸ்"
● சிங்கப்பூர் ஓவி, G44, சற்றின் சாறிகளுக்கு "மணியம்ஸ்"
● கூறைச் சேலைகள், திருமண குருடிகளுக்கு "மணியம்ஸ்"
● றெடிமேட் ஆடைகளுக்கு, மக்ஸி வகைகளுக்கு "மணியம்ஸ்"
மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
16, நவீனசந்தை, (ஹலோ: 7-5 4 5) யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனங்கள்!
மணியம்ஸ். 15, யூபிலி பஜார், 54, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும்
எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்
இறக்குமதிசெய்யப்பட்ட றீகொண்டிஷன்
''ஹொண்டா'' [CD 125 1976 Model]
மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்குண்டு.

காந்த மோட்டோர்ஸ்

54, ஸ்ரான்லிவீதி - யாழ்ப்பாணம்.



நல்லெண்ணெ ராஜா

தனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கின்றார்.

வி. எஸ். பி. ஸ்பெஷல்
(லஞ்சரயில்)
நல்லெண்ணெ
என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

வி. எஸ். பி. ஸ்பெஷல் நல்லெண்ணெ
சுத்தமானது - கலப்படமற்றது - சக்தி தருவது

ஏக விநியோகஸ்தர்களும் விற்பனையாளர்களும் :

பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7224



எல்லோருக்கும்எமது அன்பான தீபாவளி வாழ்த்துக்கள்!

புத்தகம் என்றதும் நினைவில் வருவது

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

(புத்தகங்கள், சஞ்சிகைகள் இறக்குமதியாளர்கள்)
உங்கள் புத்தகத்தேவை எதுவானாலும்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

உயர்கல்விக்கான

மருத்துவம், கணக்கியல், இயந்திரவியல், ஆயுர்வேதம், சோதிடம், தையற்கலை, சிறுவர்களுக்கான சிறுகதை, சித்திரக்கதைப் புத்தகங்களும் பிரபல எழுத்தாளர்களின் சமூக, மர்மநாவல்கள் ஆகியன ஆங்கிலம் - தமிழ் இருமொழிகளிலும் எம்மிடம் உண்டு. இன்னும் ராணிமுத்து (மாதவெளியீடு) அர்த்தமுள்ள இந்துமதம் (பாகம் 1 முதல் 10 வரை) தமிழ்மூலம் ஆங்கிலம் கற்பதற்குரிய (30 நாட்களில்) ஆங்கில பாஷை, லிஃப்கோஆங்கில ஆசிரியன் வேறு பலவிதமான ஆங்கிலத் தமிழ்க் கையக ராதி வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகட்கும், நூல்நிலையங்களுக்கும், பாடசாலைகட்கும் எமது தலைமை அலுவலகத்தில் வழங்கப்படும் சலுகைகள் இங்கும் தரப்படும் V.P.P ஏற்றுக்கொள்ளப்படும்.
ஒருமுறை விஜயம் செய்தால், நீங்கள் எமது நிரந்தர வாடிக்கையாளராவீர்கள்.
காரணம்
சேவை - நேர்மை - நியாயவிலை

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

தலைமை அலுவலகம்:
353-7, டாம் வீதி, கொழும்பு-12.
த. பெ. எண் 96, தொலைபேசி: 34529
தந்தி: ''KENNADI-6''

119, 1/1, கே. கே. எஸ். விதி,
(மைனர் கட்டிட மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 94 தந்தி ''AECEDEE''


'பாரத நாடு பழம்பெரு நாடு' இந்நாட்டின் பண்பினை விளக்கும் திருநாட்களுள் தீபாவளியும் ஒரு சிறந்த தினமாகும். இமயம் முதல் குமரி வரையும், கடல் கடந்த அப்பாலும் இந்து மதம் பரவியுள்ள நாடுகளில் இத்திருநாள் நன்கு கொண்டாடப்படுகின்றது அகில பாரதமும் இதனை ஒரு தேசிய திருநாளாகக் கொண்டாடுகிறது.

தீபாவளி என்பதன்பொருள் விளக்கு வரிசை என்பது. தீபம் அல்லது விளக்கு ஞானத்தின் அறிகுறி. அறியாமையும் கொடுமையும் ஆணவமும் அகன்று உண்மை ஞானம் உலகெங்கும் உதிக்கவேண்டுமென்பதே இத்திருநாளின் உயர்ந்த இலட்சியமாகும்.

"ஞான விளக்கு ஏற்றிவைத்தேன் நான்" என்பது மெய்யடியார் வாக்கு. "அன்பே தகழியாக, ஆர்வமே நெய்யாக, உயிர்க்குலங்கள் உய்யும் வண்ணம் உண்மை விளக்கு ஏற்றி வைத்த உத்தமர்கள்

# ஞானக்கொழு...

உதித்த நாடு பாரத நாடு. பாரத நாட்டில் பண்டு ஒருபோது ஒரு பெருங் கொடுமை நிகழ்ந்தது! கொடியவன் ஒருக்கப்பட்டான். இறைவனும் அவர் திருத்தம் பட்டான். அழிவிலும் ஆக்க

போல கோரக்காலு... இடையில் அமைதி... வந்து விளங்கிற்று! ... புரிந்தவன் அரக்கன்! முடிவில் நல்லுணர்வு... விட்டான்! ஆ... நாசகி அவன் வி...

## -- வித்துவான் சி. ஆறுமுக...

முண்டு! பெருங் கொலையும் புலையும் பகையும் ஒழிந்ததும் உலகில் அமைதி ஏற்படுவதை இன்றும் நாம் காண்கின்றோம். இத்தகைய அமைதி ஏற்பட்ட ஒரு நன்னாளே தீபாவளித் திருநாள். விளக்கின் ஒளி இருளின் மிகுதியினிடையே தான் ஓங்கி ஒளிரும். ஐப்பசி அமாவாசி முன்னூர் இருள், கார்காலத்துக் கறுக்க இருள்! அத்தகைய இருளில் ஒளி

வேண்டுமோ... குமா அமைதி நிலவுக...

## 'கந்...

ஸ்ரீ இருஷ்ண... நரகாசுரனைவதம்செ... அவன் சாகும் த... ஞானம்பெற்றவனும்... மரணத்திற்காக ஒரு... ணீர் வடிக்க வேண்... எண்ணெய் தேய்த்து... ஸ்நானம் செய்தால்... னால் நான் பெற்ற... னைக் கொண்டா... டு" என வரம் வே...

அவனுடைய கடைசி... கோளுக்கேற்ப தீபா... டிகை கொண்டாட... என்பது ஐதீகம்.

கங்கா ஸ்நான... என்பது தீபாவளிப்... வில் மூக்கிய கே... கேள்வியில் கவ... போச்சா என்ற கே... கேள்வியும் தொ... குழந்தைகளுக்கு... கள் வேணும், ... வேணும், பட்டாசு... என்ற கவலை.

தீபாவளியை நரக... என்பர். ஐப்பசி... தேய்பிறை பதி... நாளில் தீபாவளி... டப்படுகிறது. இ... புதிய ஆடை ஆபர... அலங்கரித்துக்கொ... சுர வதத்திற்கு அ... வெடிகொளுத்தி ... குழந்தைகளின் ... பார்க்கும்போதே ... இத் தீபாவளி கொ... தந்தையும் கவலை... புறத்தே தள்ளிவிடு...

தீபாவளி ... தீபவரிசை. ... வரிசை வரிசையாக ... இவ்விழாவை ஆதி... டாடினர். இன்றும் ... டில் இவ்விதம் கொ... படுகிறது. ஒவ்வொரு... இதயமும் வீடும் ... பெற்று, ஒளிபெற... பெறவேண்டும் என்... வளியின் உட்பொரு... தலாம். ஞானதீபம்... யாக ஏற்றி அஞ்ஞா...


நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

சிறந்த முறையில் உங்களுக்குத் தேவையான
எந்த வித வாகனத்திற்கும்
லைசென்ஸ்
பெறக்கூடிய வகையில் பயிற்சி பெறுவதற்கு நீங்கள்
தொடர்பு கொள்ளவேண்டியது

''லங்கா லேணஸ்''
[ Lanka Learners ]
சுளிபுரம்.
யாழ் நகரில்:
''மாபிள்ஸ்''
இல: 42, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
3890



அன்பர்கள்-ஆதரவாளர்கள்-வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

யாழ்ப்பாணத்தில் பிரபல
பிடவை வியாபாரிகள்

கணேசன் ஸ்ரோர்ஸ்

63, 78 கே.கே.எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:7169,8025



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்...
எமது தீபாவளி நல்...
லாலா உற்பத்திப் பொருள்களுக்கு நீங்கள் வழங்கும்...

லாலா சோப் ...

அச்சுவேலி. பே...



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரு...
வடஇலங்கையில் சுத்தமாக...
● அப்பள தினிசுகள் ● ஊறுகாய் வகைகள் ● மோர்மி...
● அறுஞ்சுவை உணவு ● தித்திக்கும் இன்சுவை பண்டங்கள்...
விஜயம் செய்யுங்கள். (ஓடர்க...

ஸ்ரீ தாமோதரவிலாஸ்

239, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். போன் : 7065

# ...ழுஞ்சுடர் ஏற்றுவோம்

உள்ளும் புறமும் தூயவராக தண்ணீராடி, புத்தம் புதிய ஆடை அணிந்து புதுப்பொலிவுடன் மக்கள் கோவில் வழிபாடு புரிய, புகையும் சொல்லும் பலவும் தீர்ந்து மக்கள் மகிழ்ச்சியுள் திளைக்க வீடும் வீதியும் அகல விளக்கொளி பொலிவு ஒளிர; இந்த நன்னாளே தீபாவளித் திருநாள். நான் விரும்பும் வரம் இது" கொடிய அரக்கன் இறந் இவ மனத்துடன் பல்லாயிரம் ஆண்டுகளின் முன் முடிந்த வேண்டுகோள் இது! அவன் நரகாசுரன்! நல்லவர்கள் சுவர்க்கராஜ ஆண்டவன் திருவடியை அடைந்துவிட்டான்! ஆனால் இன்றும் நம் நிலை மாறவில்லையே!

இன்று நாட்டில் எத்தனை வேறு நரகாசுரர்கள்! சாதிக் கொடுமை, சமயச் சச்சரவு, பதுக்கல், சுரண்டல், அறிவுக் குத்தகை, ஏற்றலுக்கும் புதைகுழி. எத்தனை நரகாசுரர்! ஐயையோ! இதுதான் கலிகாலம்! நரகாசுரக் கோலம்! அதர்மக் கொடுங் கோலம்! இந்தத் தர்மம் இப்படிச் சீரழிகிறதே! தீபாவளித் திருநாள் கொடுமைகளைத் தீர்க்கும் நன்னாள்-இலட்சியத் திருநாள். எங்கும் மங்கள விளக்கிட்டு மனமாசு அகற்றிச் சாந்தியுடன் வாழ, தீபாவளி ஒளி வழிகாட்டுமா?

"உள்ளொளியும் ... தன் ... ஒன்றே ... ஒளிரும் நெய்யூற்றிக் கொள்ளும் அறமாம் திரிதனில் மெய்ஞானச் செழுஞ்சுடர் ஏற்றிடுவோம்."

## ... ஆறுமுகம்

# 'கங்கை' யாடிக் கண்ணனைப் பரவுவோம்

தீபம் ஏற்றிவைத்து ... இலக்குமி நாராயண இலக்குமி ... நிவேதனம் செய்யவேண்

— சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் —

ஒழிக்கவேண்டும் என்பது தீபாவளி பற்றி வேதாந்த மனப்பான்மையுடையவர்கள் கூறும் உட்பொருள். அஞ்ஞானத்தின் ஸ்தூல வடிவமே நரகாசுரன். ஞானஒளி பரவி பரம மக்களின் ... வாழ்வு வேண்டியவையுடையது; பேரின்பவிருப்பம் உள்ளத்தில் குடிகொள்ளும் என்பது தீபாவளியின் கருத்து.

தீபாவளித் திருநாளில் சூரியோதய காலத்திலெழுந்து எண்ணெய், பழம், வெற்றிலை, பாக்கு, தீன் பண்டங்கள் ... ஓடு; இலக்குமி அருள் பெறுவதற்காகத் தாம்பூலம் தரித்த மனைவியின் கையால் அல்லது தாயாரின் கையால் தலையில் எண்ணெய் இட்டுக்கொள்ள வேண்டும்.

அந்த எண்ணெயில் இலக்குமி வசிப்பதாகவும் அன்று நீராடும் வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் கூறும். அன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர் கங்கையில் நீராடிய பலன்பெறுவர். அந்த வேளையில் சாதாரண வெந்நீரும் கங்கை நீர் போல் புனிதமாகி விடுகின்றது. கங்கா ஸ்நானத்தால் ஆரோக்கியமும் சகல பாக்கியங்களும் ஏற்படும். பொழுது விடிந்தால் தீபாவளி அமாவாசை. இந்த அமாவாசையில் தேவர்களுக்கும், பிதிர்களுக்கும் தர்ப்பணம் செய்வது அவர்களுக்கு விசேஷ திருப்தி அளிக்கும் என்பர்.

சிறப்பும் ஆனந்தமும் பொருந்திய இத்திருநாளில் ... உத்தரட ... யமைந்த புத்துயிர்

[10-ம் பக்கம் பார்க்க]


எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் உளங்கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

உரித்தாகுக!
உங்கள் இல்லங்களுக்கு ஓர்
தொலைக்காட்சி (TV)
றேடியோ, ரேப் றெக்கோடர்
தேவையாயின்
உங்கள் மனதில் முதலில் உதிப்பது
எமது ஸ்தாபனத்தின் பெயரே;
ஏனெனில்
35 வருட அனுபவத்தோடு சிறந்து பயிற்சி பெற்ற தொழிலாளர்களால்
TV றேடியோ ரேப் றெக்கோடர் போன்ற சகலதும் பழுது பார்த்து
மக்கள் மனதில் அழியாப் புகழ் பெற்றது
எமது ஸ்தாபனமே,
விற்பனைக்குப் பின் எமது உத்தரவாத சேவை உங்கள் மனதைக் கவரக்கூடியது.
எதற்கும் எமது
JVC தொலைக்காட்சிச் சாலைக்கு
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
TV அன்ரனா அமைத்துக்கொள்வதற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்;
RM
றேடியோ மனுவல்
121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
3836



எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
திருமண வைபவமா
நாட்டிய நாடக நிகழ்ச்சியா
மற்றும் எந்த வைபவமானாலும்
கலர் T.V. கமராவால் படம்பிடித்து
தருவோம்.
உங்கள் ஓய்வு நேரங்களில்
திரும்பப்போட்டு பார்த்து மகிழலாம்.
V. K. இராசரத்தினம்
பிரபல றேடியோ T. V. செற் விற்பனையாளர்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7447



ராஜு ஸ்ரோர்ஸ்
எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மங்களகரமான
தீபாவளி வாழ்த்துக்கள்!
இறக்குமதி செய்யப்பட்ட
- எசன்ஸ்—கலர் தினிசுகள்
- பழரச பானங்கள்
- பிஸ்கட்—இனிப்புவகைகள்
- விளையாட்டுச் சாமான்கள்
- வெகுமதிப் பொருட்கள்
- சிலேஸ்ரா மெத்தை வகைகள்
- கை—சுவர்—மேசை மணிக்கூடுகள்
- எனமல், கிளாஸ், அலுமினிய, பிளாஸ்ரிக் சாமான்கள்
- பாலுணவுவகைகள்

தேங்காய்த்துருவும், மாவு அரைக்கும் இயந்திரங்கள் அதன் உப உறுப்புகள்
மின்சார மோட்டோர்கள்,
மின்சார உபகரணங்கள்
இன்னும் பலவித சாப்புச் சாமான்களும் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்
67&69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: ராஜு — போன்: 372




வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும்
எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
★ கேக் தயாரிக்கும் சகல பொருட்களும்
மற்றும்
★ வீட்டுப்பாவனைக்குரிய சகல பொருட்களும்
நிதானமான விலையில் பெற்றுக்கொள்ள
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்!
ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ்
141, நவீன சந்தை — ஆஸ்பத்திரிவீதி — யாழ்ப்பாணம்.
(இரண்டாம் கட்டிடம்) தொலைபேசி: 660



...யாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும்
...வளி நல்வாழ்த்துக்கள்!
... வழங்கும் ஆதரவு, பல நற்பணிகளுக்கு உதவுகின்றது.
... தொழிற்சாலை
போன்: 231



அன்பு கலந்த தீபாவளி வாழ்த்துக்கள்!
நவீன வேலைப்பாடமைந்த தரமான வீட்டுத்தளபாடவகைகளுக்கு

வூட்சன்ஸ்
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



... அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
... சுத்தமாகத் தயாரிக்கப்பெற்ற
... மோரிமினைப் பலகாரங்கள் ● வேப்பம்பூ வடகம் ● பசுநெய்
... பண்டங்கள் அனைத்தையும், திருப்திகரமாக பெற்றுக்கொள்ள இன்றே
(ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்)
...ஸ் ஸ்ரீ ராமகிருஷ்ண
9, நவீனசந்தை, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். போன்: 7497




## தீபாவளி வாழ்த்துக்கள்!

அன்பர்கள்-ஆதரவாளர்கள்-விற்பனையாளர்கள்-

பாவனையாளர்கள் அனைவருக்கும்

எமது உளம் நிறைந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்**

உரித்தாகுக!

**மில்க்வைற் தயாரிப்புக்களின்**

மேலுறைகளை சேகரித்து அனுப்பி

- ★ அழகிய துவாய்
- ★ அப்பியாசக்கொப்பி
- ★ காந்திசிலை
- ★ மில்க்வைற் செய்தி
- ★ பொலித்தீன் பாக்
- ★ காந்தி பாக்
- ★ பனைஓலைத்தொப்பி
- ★ அறிவுநூல்கள்

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# மில்க்வைற்-யாழ்ப்பாணம்


# செய்தித் திரட்டு

இந்து சமய பாடத்துக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு, இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்விப் பணிப்பாளர் திரு. லட்சுமண ஐயரின் தலைமையில் இம்மாதம் 19ம் திகதிவரை நடைபெறும். 14ம் திகதி ஆரம்பமான இவ் வகுப்புக்கு ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலுமிருந்து ஒரு ஆசிரியர் விதம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த ஆசிரியர்களுக்கு முதன் முறையாக போக்குவரத்துச் செலவும், தினப்படியும் வழங்கப்படுகின்றது. (புளியங்குள நிரு)

### சிறுவர் ஆண்டு

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை லயன்ஸ்கழக ஆதரவில் சர்வதேச சேவை வாரமும், சிறுவர் ஆண்டு கொண்டாட்டமும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

ஏழாலை மகாவித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் இடம் பெற்றுவந்த இக்கொண்டாட்டங்களில் இலவச வைத்திய சிகிச்சைகள், சுகாதார கண்காட்சி, சுகாதார கருத்தரங்கு, நாடகம், சிரமதானம், படக்காட்சி ஆகியன இடம்பெற்றன. காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் சுகாதார சிகிச்சைகளை அளித்தார்.

### திருட்டு

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி கள்ளுத்தவறணை உடைக்கப்பட்டு 500 ரூபா பெறுமதியான பரல்கள், வாளிகள் போன்றவை திருடப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க கிளையான மேற்படி தவறணையில் இடம் பெற்ற இத்திருட்டுப் பற்றி காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

0 0 0

நெல்லியடி மத்திய சந்தையின் மரக்கறி விற்பனைப்பகுதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. நவீன சந்தை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக இப்பிரிவு இடம் மாற்றப்பட்டது.

0 0 0

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை அரசாங்கம் மூடுவதற்கு எடுத்துள்ள முடிவினை, யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் பலமாக ஆட்சேபித்துள்ளது.

அரசாங்கத்தின் இம் முடிவிற்கெதிரான தீர்மானம் ஒன்று இச்சங்கத்தின் ஆட்சி மன்ற அலுவலர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. [ஞ]

### தபால் மாஅதிபருக்கு புகார்

[சங்கானை]

காரைநகரிலிருந்து சங்கானை-மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் இ.போ.ச பஸ்ஸில் இணைக்கப்பட்டிருந்த தபால் பெட்டி கடந்த மூன்று மாத காலமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பற்றித் தபால்மா அதிபருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. [வ]


வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அன்புகலந்த தீபாவளி வாழ்த்துக்கள் !

யாழ் நகரில் தங்க, வைர நகைகளை புதிய புதிய டிசைன்களில் தெரிவு செய்வதற்கு

- கே. கே. வி. யாழ்ப்பாணம் நகைமாளிகைக்கு

விஜயம் செய்யுங்கள்.

ஓடர்கள் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்

# கே. கே. வி.

**யாழ்ப்பாணம் நகைமாளிகை**

82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 362



வாடிக்கையாளர்களுக்கு

எமது

**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான

**றெடிமேட் ஆடைகளைத்**

தெரிவுசெய்ய

இன்றே விஜயம் செய்யுங்கள்

# யாழ். ஏஜென்சி

27, மேல்மாடி நவீனசந்தை, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்

நோதலன்ட் ஹோட்டேல் ஸ்தாபனத்தாரின்

**தீபாவளி வாழ்த்துக்கள் !**

யாழ்நகரில் நவீன படுக்கை அறை வசதிகளைக்கொண்ட ஒரே ஸ்தாபனம்

**நோத்லன்ட் ஹோட்டேல்**

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

# நோத்லன்ட் ஹோட்டேல்

9, இராமையாச் செட்டியார் றேட், யாழ்ப்பாணம்.



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த

**தீபாவளி நல்வாழ்த்துக்கள் !**

எம்மிடம் போலந்து தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பக்கட்டில் அடைக்கப்பட்ட பால்மாவு, றெட்ஹாட், அங்கர், பெற்றேல்-மக்ஸ், தேமஸ் பிளாஸ்க்குகள், வர்ணக் கிளாசுகள், தன்னியக்க காஸ் அடுப்புகள், கைத்தொழில் பேட்டைகளுக்கும் வீட்டுப் பாவனைக்குமான காஸ் வகைகள் பெற்றுக்கொள்ளலாம்.

பொருட்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் ஏற்றிச் செல்வதற்கான தனியான வாகன சேவைப்பிரிவு.

எதுதேவையோ அதனைப் பெறுவதற்கு முகமதலி அப்துலலி

# முகமதலி அப்துலலி

5 - 7, பெரியகடை, யாழ்ப்பாணம். போன் : 515

அனைவருக்கும் எமது அன்பு கலந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்!**

இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த தங்க, வைர நகைகளைத் தெரிவுசெய்ய மறவாதீர்கள்

**பொ. அம்பலவாணர்**
**தங்க, வைர, நகை வியாபாரம்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி: "வைரம்"

## சிறுவர்க்கொருநாள் தீபாவளி

இருளும் போச்சு ஒளியும் ஆச்சு
இன்பத் திருநாள் வந்தாச்சு
மறையும் உடலும் மருளும் உடையும்
மனமும் நிறைவும் கொண்டாச்சு
மகியும் பேச்சும் மயக்கும் நடையும்
மாலை வரையும் முடிந்தாச்சு
பெருகும் ஒளியும் மணிசூழ் ஒலியும்
பெருநாள் தீபாவளி என்றாச்சு;

சிறுவர்க் கொருநாள் தீபாவளி
சிந்தை மகிழும்நாள் தீபாவளி
பெருமைக் கொருநாள் தீபாவளி
பெருமானை நினைக்குநாள் தீபாவளி
அசுரன் ஒழிந்தநாள் தீபாவளி
அமரனும் ஆனநாள் தீபாவளி
அன்புக் கொருநாள் தீபாவளி
அனைவரும் போற்றுநாள் தீபாவளி

--மேலைப்புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி

அனைவருக்கும் அன்பு கலந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்**
கல்யாண வைபவங்களுக்கேற்ற
0 கூறைச் சேலைகள்
0 பட்டுவேட்டிகள்
நாகரீக ஜவுளிகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்
**க. நாகமுத்து அன் சன்**
48, 50, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 7475
0 அழகிய சேட்வகைகள்
0 பெல்பொட்டம்
0 சிறுவர் ஆடைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்! மீண்டும் வருக நன்றி!

அனைவருக்கும் அன்புகலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
கண்ணுக்கினிய நகைகளுக்கு ஜப்பான் ஜுவெலர்ஸ்
கருத்தைக் கவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவெலர்ஸ்
மாற்றுக்குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவெலர்ஸ்
[ஞாபகத்தில் என்றும் வைத்திருங்கள்]
**ஜப்பான் ஜுவெலர்ஸ்**
64, கன்னாதிட்டி ரேட், போன்: 518 யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் அன்பு கலந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்**
**வசந்தா வஸ்திராலயம்**
இலக்கம் 20, (மேல்மாடி) மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
0 பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான சீருடை (Uniforms) ரையிஸ் (Ties) தையல்செய்ய
0 குழந்தைகள், பிள்ளைகளின் சட்டைகள், பெண்களின் ஆடைகள் நவீன முறையில் தையல் செய்ய
0 கோயில்களுக்குத் தேவையான திரைச்சீலைகள் வரைதல், பிறின்ரிங் செய்ய
0 துணிவகைகள் சாயமிட, பிறின்ரிங்செய்ய
நீண்டகால அனுபவமும் திறமையுமிக்க சிறந்த ஸ்தாபனம்.
**விஜயம் செய்யுங்கள்!**

அனைவருக்கும் அன்பு கலந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்!**
கூடிய விரைவில் நாங்கள் சைக்கிள் டயர்களும், ரியூப்புக்களும் உற்பத்திசெய்யவிருக்கின்றோம் என்பதனை எமது ஆதரவாளர்கள் அனைவருக்கும் மிகவும்மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.
★ கவர்ச்சியான இழை
★ சொகுசான ஓட்டம்
★ நீடிய பாவனை
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றிற்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை எம்மிடம் புதுப்பியுங்கள்
**நோர்தேண் இன்டஸ்றீஸ்**
112, ஸ்ரான்லி ரேட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர் அனைவருக்கும் உளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
விவசாயிகளுக்கோர் நற்செய்தி!!
எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இலங்கையின் பிரபல நீரிறைக்கும் இயந்திர உற்பத்தி ஸ்தாபனமான "சென்றிக் கம்பனி லிமிட்" மின்சாரத்தில் இயங்கும் மின் மோட்டர்களைப் பெருமளவில் உற்பத்திசெய்து விற்பனைக்கு விட்டுள்ளது, வடமாகாணத்தின் ஆகக்கூடிய 60 அடி ஆழமான கிணற்றிலிருந்தும், இறைக்கக்கூடிய வகையில் தொழில்நுட்பத்துடன் உற்பத்திசெய்யப்பட்ட மின் மோட்டர்கள் எம்மிடமுண்டு,
கீழ்க்காணும் பொருட்களுக்கு வடமாகாண விநியோகஸ்தர்கள்:
0 றெபின் 0 சிங்கா இயந்திரங்கள், 0 எலெக்றிக் மின் மோட்டர்கள் 3/4" தொடக்கம் 3" வரைக்கும்.
0 ஜெம் மோட்டர்கள் 0 ஆல்ப் மின்சார துளையிடும் கருவிகள் 0 சி. ஈ. பி. மின் குமிழ்கள் 0 எவரெடி பற்றறிகள் -- ரோர்ச் லைட்டுகள் 0 எஸ்-லோன் நீர்க் குழாய்கள் 0 மற்றும் சகலவிதமான மின்சார உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற்றுக்கொள்ளலாம்.
வடமாகாணத்தின் பிரபல நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின்சார உபகரணங்களின் மொத்த சில்லறை வியாபாரிகள்:
**நியுரோன் எலெக்றிக்கல்ஸ்**
141 - 143, ஸ்ரான்லி வீதி, [தொலைபேசி; 7016] யாழ்ப்பாணம்.
எமது கிளை ஸ்தாபனமான
**பாஸ்கரன் கம்பனி, இல. 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்**
சகல ரக பைசிக்கிள்களும், உப உறுப்புக்களும், மின்சார உபகரணங்களும் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 7724

அனைவருக்கும் அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
உங்களுக்குத் தேவையான
அழகிய பவுண் நகைகள்,
தங்கப்பவுண், வைரங்கள்
ஆகியவற்றுக்கு
கே. என். எம்.
மீருன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, போன்: 585 யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
Mackinnon Travel Service
(Ceylon) Ltd.
தமது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கிவருகிறது.
இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- கடற்பயணங்கள்
- பாஸ்போர்ட்
இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே
ஒழுங்கு செய்துகொள்ளலாம்;
உங்கள் பிரயாண ஒழுங்குகளை
மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிடெட்
ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்,
தபால்பெட்டி எண்: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

# தீபாவளி எவ்வாறு தோன்றியது!

தீபாவளி நமது நாட்டில் இந்து சமயத்தவர் கொண்டாடும் விழா என்பதை அனைவரும் அறிவோம். தீபாவளி, சமண சமயத்தவராலும் கொண்டாடப்படுகிறது என்பதைப் பலர் அறியமாட்டார்கள். அது சமணர்களால் ஏன் கொண்டாடப்படுகிறது, என்பதைப் பார்ப்போம்.

வர்த்தமான மகாவீரர், பாவாபுரி நகரத்திலே அவ்வூர் மன்னனின் அரண்மனையில் தங்கியிருந்தபோது, அங்கிருந்த மக்களுக்கு அறிவுரைசெய்தார். இரவு முழுதும் நடைபெற்ற சொற்பொழிவு, பொழுது விடியும்போது முடிவுற்றது. சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் அவரவர் இடத்திலமர்ந்தபடியே உறங்கிவிட்டார்கள். வர்த்தமான மகாவீரரும் தாம் அமர்ந்திருந்த இருக்கையிலமர்ந்தபடியே வீடுபேறடைந்தார். பொழுது புலர்ந்தது. அனைவரும் விழிப்படைந்து எழுந்து பார்த்தபோது, மகாவீரர் வீடுபேறடைந்திருப்பதைக் கண்டனர். உடனே தமது மன்னருக்குத் தெரிவித்தனர். மன்னன் ஏனைய அரசர்களை வரவழைத்தான். அவர்களுடன் கலந்துரை செய்தபின்னர், "உலகத்திற்கு அறிவொளியாகத் திகழ்ந்த மகாவீரரை நினைவுகூர்ந்து வழிபடும்பொருட்டு, அவர் வீடுபேறு பெற்ற நாளில் இல்லந்தோறும் விளக்குகளை ஏற்றிவைத்து விழாக்கொண்டாடும்படி ஆணையிட்டான். மக்கள் அவ்வாறே செய்தனர். அந்தவிழா நாள்தான் தீபாவளி; தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள். மகாவீரர் விடியற்காலையில் வீடுபேறடைந்ததனால், தீபாவளியும் விடியற்காலையில் கொண்டாடப்பெறும் விழாவாக அமைந்துள்ளது.

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவர்க்கும் இதயங்கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
நவநாகரீக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹீரன்
ஜுவல்லர்ஸ்
போன். 444
தந்தி. இரத்தினமஸ்
50. கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

தீபாவளி வாழ்த்துக்கள்!
யாழ். மெற்றல் உற்பத்திப் பொருட்களான
அலுமினிய, பித்தளைப்
பாத்திரங்கள்
லேக்கவுஸ் பத்திரிகைகள்
தென்னை அபிவிருத்திச் சபையாரால்
அங்கீகரிக்கப்பட்ட
பசளை விற்பனையாளர்கள்
யாழ்மெற்றல்
விற்பனை நிலையம்
Yarl Metal Sales Centre
6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
போன். 7596


தீபாவளி நன்னாளில் எங்கள் மனங்கனிந்த
நல்வாழ்த்துக்கள்!
உங்கள் குடும்பத்தினருக்கு
வேண்டியதைத் தேர்ந்தெடுக்க;
நினைவில் நிற்கும் ஒரு
தனிக்கடை - சின்னத்துரை அன் பிறதர்
சி. சின்னத்துரை அன் பிறதர்
39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 284.

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த தீபாவளி வாழ்த்துக்கள்

**நாகம்ஸ்** (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30,
சனி, ஞாயிறு 2-30

எம்.ஜி.ஆர். — சாவித்திரி

**மகாதேவி**

---

## நாளை கூடுவர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இளந்தமிழர் மன்றப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிறு காலை மன்றத்தலைமை செயலகமான அறிவகத்தில் மன்றத்தலைவர் சட்டத்தரணி திரு எஸ் கே மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**ராஜா** (யாழ். நகர்)

தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர்-வீரப்பா-சாவித்திரி நடித்த

**ம கா தே வி** (புதிய பிரதி)

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**வெஸ்லி** (மானிப்பாணம்)

தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

ஜெமினி
சுஜாதா
கமலஹாசன்
சௌகார் ஜானகி
நடித்த

**லலிதா**

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**வெலிங்டன்** (சாவகச்சேரி)

தினசரி 3 காட்சிகள்
சனி ஞாயிறு 4 காட்சிகள்

ஜெய்சங்கர்-ராஜ்கோகிலா

**எங்க பாட்டன் சொத்து**

---

**லிடோ** (யாழ் நகர்) போன்: 7693 தினசரி 4 காட்சிகள்

**ABBA THE MOVIE** (Color)

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**REGAL** (Jaffna)

Daily at 2-00, 4-30, 7-00, & 9-30 P M

JEFS BRIDGES, ANDY GRIFFITH,
ALAN ARIN

**"HEARTS OF THE WEST"**

(Color Adults War Film)

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**வின்ஸர்** யாழ்ப்பாணம்

தினசரி 10-30, பி.ப.2-30, 6-30, 9-30

சிவாஜி கே.ஆர்.விஜயா-சிவகுமார்-வாசு நடித்த

**கிரஹப்பிரவேசம்**

(புதிய பிரதி)

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**Ranee [Jaffna]** Daily at 10-30 a. m., 2-30, 4-30, 7-00&9-30 p.m.

After its record breaking run in Colombo now comes to entertain you.
The most eagerly awaited Film.
The Best War Film to be released after a lapse of several years

**OPERATION DAY BREAK**

(One of the True great adventure story of our time.)

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**RIO** (யாழ்ப்பாணம்)

தினசரி 10-30 4-45, 7-00. 9-30

ஆங்கிலப் பட வரலாற்றிலே ஒரு சில நாட்களில் வசூலில் எல்லாவற்றையும் முறியடித்து புதிய சாதனையை உண்டாக்கிய அதி சிறந்த மிகப் பிரமாண்டமானதயாரிப்பு

BURT YOUNG. ERNEST BORGRINE
in
**CONVOY**

**கொன்வோய்**

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

3வது ஜனத்திரள் வாரம்

**ஸ்ரீதர்** (யாழ்நகர்)

தினசரி 4 காட்சிகள்

காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்பட விருப்பதால் காட்சி நேரங்கள்குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம.

நடிகர் திலகம் **சிவாஜி கணேசன்** நடிப்புச்செல்வி **சுஜாதா**
அறிமுகம் **விஜயகுமார்**, சங்கீதா, நாகேஷ், சத்தியப்பிரியா,
ராமதாஸ், மனோரமா, சுந்தரராஜன்,
சுருளிராஜன், சச்சு இன்னும் பலர் நடித்திருக்கிறார்கள்.

இசை : இளையராஜா — வெள்ளிவிழாச் சித்திரம்

**தீபம்**

(வர்ணக் கலர்)

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

3-வது ஜனத்திரள் வாரம்

**மனோஹரா** A யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன் ★ சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன்
மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.

முக்தா பிலிம்ஸாரின்

**அந்தமான்காதலி**

இசை: எம். எஸ். விஸ்வநாதன் — (வண்ணப்படம்)

**முக்கிய அறிவித்தல்:-** தினசரி மாலை 6-00 மணிக்காட்சி முடிவடைந்தவுடன் பஸ்றிலையம் வரை செல்வதற்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

---

சினிமா ரஸிகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

**சாந்தி** (யாழ் நகர்)

தித்திக்கும் தீபாவளித் திரைவிருந்து!

காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்பட விருப்பதால் காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்.

மக்கள் கலைஞர்
**ஜெய்சங்கர்....**
**ஸ்ரீதேவி.......**
**ஸ்ரீகாந்த்......**
**எம்.ஆர்.ராதா....**
**அசோகன்......**
**பண்டரிபாய்...**
**சுருளிராஜன்...**
**மனோரமா......**
வி.எஸ்.கோபாலகிருஷ்ணன்
இன்னும் பலர் நடித்த



**டாக்ஸி டிரைவர்**

(ஈஸ்ட்மன் கலர்)

பிரமாண்டமான பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட அற்புத படைப்பு!
மக்கள் கலைஞரின் 150-வது படம்!!
பயங்கர சண்டைக்காட்சிகளுடன் இனிய காதற்காட்சிகளும் நிறைந்த வர்ணச்சித்திரம்!!!

பாடல்கள்: கண்ணதாசன் — இசை: M S விஸ்வநாதன்

பின்னணி: எஸ்.பி.பாலசுப்பிரமணியம், எஸ்.ஜானகி, எல்.ஆர்.ஈஸ்வரி, வாணிஜெயராம்

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்

பொதுமக்களுக்கு

# ஓர் நற்செய்தி!

எமது முதல் தயாரிப்பான

'சில்வர் ஸ்ரார்'

# எவர்சில்வர் பாத்திரங்கள்

(STAINLES STEEL)
HOUSEHOLD UTENSILS)

கீழ் காணும் விநியோகஸ்தர்களிடம் விற்பனையாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்

மொத்த வியாபாரிகட்கு விசேஷ கழிவுண்டு
உடனடியாகத் தொடர்புகொள்ளவும் ·

| கேசி லிமிட்டெட், | எலெக்ட்றிக்லைன்ஸ் |
| --- | --- |
| 252, 2ம் குறுக்குத் தெரு, | 120, கே. கே. எஸ். வீதி |
| கொழும்பு. | யாழ்ப்பாணம். |
| தொலைபேசி: 26108 | தொலைபேசி: 7376 |

தயாரிப்பாளர்கள்:-

சில்வர்ஸ்ரார் இன்டஸ்றீஸ்
103, பிறவுண்வீதி, கொக்குவில்.


## ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் ஸ்கந்த ஷஷ்டி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஆறுநாட்கள் நடைபெறும்.

காலை 9 மணி ரஷாபந்தனம் 9-30 விதபரூபிஷேகம், 11 மணி உச்சிக்காலபூசை மாலை 3 00 திருச்செந்தூர் புராணபடனம், 5-30 சாயரட்சைபூசையில் ஷண்முகார்ச்சனை, இரவு 7-00 "குன்றமர்ந்துறைதலும் உரியன்" என்னும் பொருள்பற்றி வித்துவான் க. ஆறுமுகத்தின் கதாப்பிரசங்கம் 7-30 வசந்த மண்டபபூசையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி எழுந்தருளல். கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களுக்கு கோவிலில் தங்கியிருந்து வழிபாடு செய்வதற்குவேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி கோவில் ஸ்கந்தஷஷ்டி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஆறுநாட்கள்வரை நடைபெறும்.

தினமும் காலை 10 மணி நவோத்தரசதசங்காபிஷேகம், மாலை 5-15 கதாப்பிரசங்கம்

## கங்கை......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவோம். தீபம் ஏற்றித் தெய்வம் தொழுவோம். 'கங்கை யாடிக் கண்ணனைப் பணிவோம். இறையருள் பெற்று நல்வாழ்வு வாழ்வோம்!

## ஜனாதிபதி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசார் காரியாலயத்தைக் காவல்புரிந்துவருகின்றனர். (ஐ-இ)

## உயர் நீதிமன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துவருகின்றார் என்றும் இதனால் பத்திரிகைக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் கூறி, அவர் உயர்நீதிமன்றத்தில் ஆஜராக ஆறுமாதகால அவகாசம் வழங்கக்கூடாது என்றுகேட்டுக்கொண்டார்.

இதை அடுத்து நீதியரசர்கள் விமலரத்தின, தம்பையா ஆகியோர் திரு. துரைசுவாமி தம்முன் ஆஜராவதற்கு இரு வார அவகாசம் வழங்கியுள்ளார். (இ)

பொருள்! சுந்தர் அநுபூதி சிந்தக்கடல் திருப்பூங்குடி வி வி கே. ஆறுமுகம், 6-00 விசேஷபூசையில் தியாகபூர்வ சண்முகார்ச்சனை இரவு 7- 0 வீதிஉலாக்காட்சி இம்மாதம் 26ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் சூரசங்காரமும் மறுநாள் சனிக்கிழமை திருக்கல்யாணமும் நடைபெறும். (செ)

## கவியரங்கம்

(யாழ்ப்பாணம்)

நாளை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மகாநாட்டின் இறுதி நிகழ்ச்சிகளில் ஒன்றாக கவியரங்கம் இடம் பெறவிருக்கிறது

"...றிக்கொடுமைகள் சாகக் கவிக்கணை கூடித் தொடுத்திடுவோம்" என்னும் தலைப்பில் பண்கலை வேந்தன்-சின்னையூர் செல்வராசன் தலைமையில் கவியரங்கு இடம் பெறும்.

"கதை இன்னும் முடியவில்லை" எனும் நாடகமும் நாளை மாலை அரங்கேறவிருக்கிறது

இந்நாடகத்தில் "பொன்மணி", "குத்துவிளக்கு" திரைப்படக் கலைஞர்கள் பலர் பங்கேற்கின்றார்கள். டாக்டர் நந்தி, டாக்டர் பேரம்பலம், சிசு நாகேந்திரா, வி. ரி. இளங்கோவன், கிருஷ்ணராசா, சிவனடியான், தயாநிதி தர்மலிங்கம், அன்ரனெற் அந்தோனிப்பிள்ளை உட்பட மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

## கூட்டணித்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிவசிதம்பரம் விடுத்துள்ள தீபாவளிச் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

### அறிவித்தல்

காரைநகர் வடக்கு ஸ்ரீசிதம்பரேஸ்வர சனசமூக நிலையத்தினரால் 20-10-79 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு அதாவது தீபாவளித்தினத்தன்று டி. நிலைய முன்றலில் நடைபெற இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் 28- 10-79 ஞாயிறு மாலை 4-00 மணிக்கு அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

ஆ. சிவபாதம்,
செயலாளர்.

8908


# றிக்கோ சுவிற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்

வாடிக்கையாளர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்




இறக்குமதிசெய்யப்பட்ட

★ அப்பிள் பழங்கள் ★ ஸ்மாட்டீஸ் (Smarties)

★ அங்லோ பப்ளி (Anglo Bubbly – Bubblegum)

★ பிஸ்கட்டுகள் முதலியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு றிக்கோவுக்கு விஜயம்செய்யுங்கள்.

★ உங்கள் வீடுகளுக்கு எடுத்துச்செல்லக்கூடிய வகையில் பமிலிபுளக் ஐஸ்கிறீம் றிக்கோவில் பெற்றுக்கொள்ளலாம்;

★ அசல் றிக்கோ கோப்பியை உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்ள

றிக்கோவுக்கு விஜயம் செய்க

யாழ் நகரில் சிறந்த உபசரிப்புக்கு றிக்கோ

# றிக்கோ சுவிற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்

370, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்; (தொலைபேசி: 464, 7889.)

முக்கிய குறிப்பு றிக்கோவுக்குக் கிளைஸ்தாபனங்கள் எதுவும் கிடையாது



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QD/3948/78 The Eelanadu P.B. No. 49, [illegible] Eelanadu T.Phone 889.